புதிய அவையம்
PUTHIYA AVAIYAM
A Peer-reviewed Journal & Bilingual Journal for Arts and Humanities
ज्ञान - विज्ञानं विमुक्तये
UGC Approved Journals
ISSN: 2456-821X
Vol:07, Issue: 02 கட்டுரை ஏற்றுக்கொள்ளப்பட்டது மே 2023 – வெளியிடப்பட்டது ஜூன் 2023
SACRED HEART RESEARCH PUBLICATIONS
June-2023

==========================================================================

# சித்த மருத்துவத்தில் காயகற்ப மருத்துவம்

முனைவர் ஆ.சந்திரசேகரன்
உதவிப் பேராசிரியர், தமிழ் உயராய்வுத் துறை
விவேகானந்தா கலை மற்றும் அறிவியல் மகளிர் கல்லூரி (தன்னாட்சி)
எளையாம்பாளையம், திருச்செங்கோடு
நாமக்கல் மாவட்டம்

==========================================================================

ஆய்வுச்சுருக்கம்

தமிழகத்தில் வாழ்ந்த சித்தர்கள் கண்டறிந்த காயகற்ப மருத்துவ முறை உடம்பைப் பிணியிலிருந்து காத்துக் கொள்ளவும் பிணிபடாதிருக்கவும் பயன்படுத்தினர். பிணிபட்டால் தீர்க்கும் உடனடி மருந்தாகவும் எப்பொழுதும் இளமைத் துடிப்புடனும் உடல் வலிமையுடனும் இருக்கச் செய்யும் மருந்தாகவும் பயன்படுவது காயகற்ப மருத்துவ முறையாகும். மண்ணில் விளையும் பொருட்களில் மேன்மையான மூலிகைகளையும் மண்ணில் உள்ள தாதுக்களான பாடாணங்கள் உபரசங்கள் ஆகியவற்றைக் கொண்டும் காயகற்ப மருந்துகளைச் சித்தர்கள் தயாரித்துள்ளனர். இத்தகைய சிறப்புமிகு மருத்துவம் பற்றி இங்கு ஆராயப்படுகிறது.

## முன்னுரை

தமிழ் மக்களிடையே தொன்று தொட்டு சித்த மருத்துவம் ஒரு மருத்துவமாக வழக்கத்தில் இருந்து வருகின்றது. நவீன மருத்துவத்தில் சிறப்பு மருத்துவ முறைகளை உலகிற்கு அறிமுகப்படுத்தியதே சித்த மருத்துவம் எனலாம். அக்கால மக்களிடத்தில் பல்வேறு சிறப்புகளைப் பெற்று விளங்கியது சித்த மருத்துவம் ஆகும். தொழில் நுட்பமே இல்லாத காலக்கட்டத்தில் பல்வேறு வகையான சித்த மருத்துவ முறைகளை மக்கள் அறிந்திருந்தனர். அத்தகையச் சிறப்பிற்குரிய சித்த மருத்துவ முறைகளுள் காயகற்ப மருத்துவத்தை பற்றி ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

காயகற்ப மருத்துவம் என்பது உடலைக் கல் போல் ஆக்கும் மருத்துவம் ஆகும். காயம்+கல்பம் உடல் இறுகி நோய்த்தாக்கம் ஏற்படாமல் பாதுகாக்கும். காயகற்ப மருத்துவத்தைப் பற்றித் திருவள்ளுவர் ஞான வெட்டியான் எனும் நூலில்,

> "கற்பமுறை சொல்லுகிறேன் ஆண்டே நான்
> கற்ப முறை சொல்லுகிறேன்"1

என்று குறிப்பிட்டுள்ளார். சட்டமுனிச் சித்தரும்

> "சூடுகிறேன் காய சித்திக் காதியந்தஞ்
> சொல்லுகிறேன் நன்றாகக் கேளுகேளே"2

என்று காயகற்ப முறையை வகுத்திருப்பதைக் காணமுடிகிறது.

காயகற்ப மருந்துகளை உண்டால் காயம் எனும் உடல் பிணிவழிச் சிதைவடையாது, பிணிகள் உள்ள நிலையில் உண்டால் பிணிகள் நீங்கிவிடும். தாதுக்களின் சிதைவால் மரணத்தை உண்டாக்கும் கொடிய பிணிகளைப் போக்குவதுடன் உடலையும் வலுப்பெறச் செய்கின்றன. காயகற்ப மருத்துவத்தில் சித்தர்கள் மூலிகைகளையும், பிற தாதுப் பொருட்களையும் உபயோகத்தில் கொண்டிருந்தனர் என்பதைத் திருமூலர் கீழ்க்காணுமாறு குறிப்பிடுகின்றார்.

> "மூலிகைக் கற்ப முயன்றிருபதும்
> பாலியுபரசம் பாங்காயறுபதும்
> வாலிய சூதம் தங்க மிரண்டும்

ஒலியொருநூற் றிருபத்திரண்டே"3

என்று மூலிகைக் காயகற்பங்கள் அறுபது என்றும் உபரசம் என்னும் பிற தாதுப் பொருட்களின் காயகற்பங்கள் அறுபது என்றும் சூதம், தங்கம் இவை இரண்டுமாக நூற்றிருபத்திரண்டு காயகற்ப, காய சித்தி மருந்தாகப் பயன்படுத்தியுள்ளதை திருமூலர் சுட்டிக்காட்டியுள்ளரர். மேலும் இக்காயசித்தி மருந்தினைப் பிணியில்லாத முழு நலவாழ்வுக்கான மருத்துவமாகவும் கொடிய பிணிகளிலிருந்து காக்கும் மருத்துவமாகவும் பயன்படுத்தியுள்ளனர் என்பதையும் இப்பாடல் வழி அறிய முடிகின்றது.

மூலிகைக் காயகற்பங்கள்

மூலிகைக் காயகற்பங்களை வகைப்படுத்திய சித்தர்கள், அவற்றில் தனிமூலிகைக் கற்பமாகவும் கலப்புக் கற்பமாகவும் திரிமூலிக் கற்பமாகவும் பஞ்சமூலிக் கற்பமாகவும் அட்டமூலிக் கற்பமாகவும் வகைப்படுத்தியுள்ளனர். கற்ப மருத்துவத்திற்குரிய மூலிகைகளைப் பற்றி,

"கேளென்ற கருநெல்லி கருத்த நொச்சி
கெடியான கருவீழி கருத்தவாழை
கானென்ற கரிய கரிசாலையோடு
கருப்பான நீலியெடு கரியவேலி"4

என்ற பாடலில் போகர் சித்தர் குறிப்பிட்டுள்ளார். அதாவது கருநெல்லி, கருநொச்சி, கருவீழி, கருவாழை, கருகரிசாலை, கருநீலி, கருப்புக்கொடிவேலி ஆகியவையும் கருஊமத்தை, சிவன்வேம்பு, வெள்ளருகு, பொடுதலை, நிலப்பனை, நத்தைச்சூரி, வெள்ளெருக்கு, தலைச்சுருளி, ஓரிதழ்த்தாமரை போன்றவை காயகற்ப மூலிகைகளாகும்.

காயகற்பங்களில் தாதுக்கள், உபரசங்கள் மண்ணில் விளையும் பொருட்களில் மேன்மையான மூலிகைகளையும் மண்ணில் தாதுக்களான உலோகங்கள், பாடாணங்கள், உப்புகள் மற்றும் உபரசங்கள் இவற்றைக் கொண்டும் காயகற்ப மருந்துகளைச் சித்தர்கள் வகைப்படுத்தியுள்ளனர். இதை,

"பாலியுபரசம் பாங்காயறுபதும்
வாலிசூதம் தங்க மிரண்டும்"5

எனும் திருமூலர் சித்தர் பாடல் வரிகளின் மூலம் அறிய முடிகின்றது.

சித்தர்கள் வகைப்படுத்திய கற்ப மூலப்பொருட்களை நட்புப் பொருட்கள், பகைப்பொருட்கள், ஆண் பொருட்கள், பெண் பொருட்கள், உப்புப் பொருட்கள், புளிப்புப் பொருட்கள் என வகைப்படுத்தியுள்ளனர்.

செயல்முறைக்கு உட்பட்ட மருந்துப் பொருள்களான பஞ்சவேதகம் என்ற ஐந்து விதமான வேதகச் செயல்கள் மூலம் மருந்துப் பொருட்களைப் மருந்து மூலப் சுண்ணமாக்குதல், பற்பமாக்குதல், செந்தூரமாக்குதல், கட்டுதல் போன்ற உயர்ந்த மருந்துகளைச் செய்துள்ளனர் என்பதனை,

"மகத்தான மூலிகை தான் பரிசவேத
காமப்பா ஒப்பின்றி சூதம் கட்டும்"6

எனும் போகர் சித்தர் பாடல் வரிகளால் அறியலாம். இம்மருந்துகளை மீண்டும் மூலிகைகளில் நட்புப் பொருளைக் கொண்டு உரிய செயல்முறைகள் மூலம் காய கற்ப மருந்தாகச் செய்துள்ளதை,

"வாமப்பா மலைதோறு மூலிகையுண்டு
மகத்தான மூலிகை தான்பரிசவேத
காமப்பா ஒப்பின்றி சூதம் கட்டும்
கலந்து நின்ற வாசனை பாடாணஞ்சாகே
சாகவே சரக்காணவறுபத்து நாலுந்
தனித்தனியே வேதையுமாஞ் சதிரத்துக்கேடுஞ்"7

எனும் போகர் சித்தர் பாடலில் குறிப்பிடப்பட்டுள்ளது. இப்பாடலில் அறுபத்து நான்குக் கற்ப மூலிகைகளைக் கொண்டு ஐந்து வித மாற்றங்களை உருவாக்குவதுடன், கற்ப மருந்தாகவும் மாற்றம் கொண்டு உடலைப் பிணியிலிருந்து காக்கிறது. அத்துடன் உடல் சிதைவைத் தடுத்து உடலைக் கற்பமாக்குகிறது என்றும் சுட்டிக்காட்டியுள்ளார்.

*காயகற்பம் உண்ணும் முறை*

*காயகற்ப மருந்துகள் நூற்றிருபத்திரண்டு என வகுத்தச் சித்தர்கள், அம்மருந்துகளை உண்ணும் முறை பற்றியும் குறிப்பிட்டுள்ளனர். இம்முறையை,*

*“வாங்கியதோர் காயசித்தி செய்யும் மார்க்கம்*
*வரிசையாய்ச் சொல்லுகிறேன் கேளு*
*ஓங்கியதோர் கடுக்காயை முந்தியுண்ணு*
*யுத்தமனே யிருபதுநாளான பின்பு*
*பாங்கியதோ ரவ்வைந்தாய் மிளகை யேற்றி”8*

*எனும் பாடலில் சட்டைமுனிச் சித்தர், கடுக்காயை இருபது நாட்கள் உண்ண வேண்டும்; பின்பு மிளகை ஐந்து ஐந்தாகக் கூட்டி இருபது நாட்கள் உண்ண வேண்டும்; அவ்வாறு உண்ணுவதன் மூலம் பலன் தரும் குறிப்பிட்டுள்ளார். அதே போன்று கடுக்காயை ஒரு வருடம் உண்ணும் முறையையும் சித்தர்கள் குறிப்பிட்டுள்ளனர். அவர்களுள் திருமூலர் சித்தர்,*

*“காணாத சித்தர்க்கு காயம் வலுநிற்க*
*ஏணாகத் தின்ன விசைந்த முறைகேளு*
*ஈணாவயது இருபதில் மண்டலம்*
*பூனாவருவதில் போல் ரெட்டி தின்றிடே”9*

*என்று குறிப்பிட்டுள்ளார். இப்பாடலின் மூலம் வயதிற்கு ஏற்றவாறு கற்ப மருந்துகள் உட்கொள்ளும் விதம் மாறுபடுவதையும், மரணமின்றி எப்பொழுதும் இளமைப் பருவமாகவே இருக்கலாம் என்பதையும் சுட்டிக்காட்டியுள்ளார். மரணமின்றி இருப்பது என்பது உடல் அழியாமல் உயிரால் வாழ்வதாகவே சித்தர்கள் நம்பினர் என்பது எண்ணத்தக்கது.*

*உடல் மாற்றங்கள்*

*காயகற்ப மருந்து உட்கொள்ளும்போது உடலில் ஏற்படும் மாற்றங்களைச் சித்தர்கள் நன்கறிந்துள்ளனர். அதாவது முதல் திங்களில் கடுமையான பேதியும், இரண்டாம் திங்களில் சூடு உண்டாகிப் பேதியும் மந்தமும் மூன்றாம் திங்களில் வாய்முதல் மலவாய்வரை வேக்காடும் நான்காம் திங்களில் ஆண்மை குறைதலும் ஏற்படும் என்பதை,*

*“பிறந்திடுங்கற்பந்தான் பேறாகத்தின் கையில்*
*கறந்திடும் வாமமும் கடுமலமே போக்கும்*
*மறந்து வழலையு முன்பித்தமும் நீக்கி”10*

*என்ற பாடலில் திருமூலர் எனும் சித்தர் எடுத்துரைத்துள்ளார். காயகற்பம் மருந்து உபயோகிக்கும் போது அதற்குரியக் கட்டுப்பாடுகளைக் கடைப்பிடிக்காவிட்டால் மேற்கண்ட சில குறைகள் ஏற்படும் என்பதையே இங்குச் சித்தர்கள் குறிப்பிட்டுள்ளனர் எனலாம்.*

*காயகற்ப மருந்து உட்கொள்ளும்போது உணவுக் கட்டுப்பாடும், பழக்க வழக்கங்களில் மாற்றமும் தேவை என்பதை,*

*“உண்ணவே கற்பத்துக் குறுதிகேளு*
*உப்பாகா புளியாகா பெண்ணுமாகா”11*

*என்று போகர் சுட்டிக்காட்டியுள்ளார். உப்பு, புளி போன்ற சுவைகளைத் தவிர்த்தும் புணர்ச்சியைத் தவிர்த்தும் கற்ப மருந்து உட்கொள்ள வேண்டும். உணவினைக் கூட்டிக் கொண்டால் நலம் பயக்கும் என்பதை இப்பாடல் வழி உண்ணும் உணவில் சிறுபயறு, பழம், தேன் போன்ற நாம் அறிய முடிகின்றது.*

*முடிவுரை*

*உடலில் பிணி ஏற்பட்டு உயிர் பிரிகிறது என்பதையும் உடம்பைப் பிணியிலிருந்து காத்துப் பிணிபடாதிருக்க முன் மருந்தாகவும் பிணிபட்டால் அவற்றைத் தீர்க்கும் மருந்தாகவும் எப்பொழுதும் இளமைத் துடிப்புடனும் உடல் வன்மையுடனும் இருக்கச் செய்யும் மருந்தாகவும் பயன்படுவது ‘காயகற்ப’ மருத்துவ முறையாகும். இம் முறையை மூலிகைகளின் வாயிலாகக் கலப்புக் கற்ப மருந்துகள், தனிமூலிகைக் கற்ப மருந்துகள், திரிமூலிக் கற்பம், பஞ்சமூலிக்கற்பம், அட்டமூலிக்கற்பம் என வகைப்படுத்தியுள்ளனர்.*

*மண்ணில் விளையும் பொருட்களில் மேன்மையான மூலிகைகளையும், மண்ணில் தாதுக்களான பாடாணங்கள், உபரசங்கள் ஆகியவற்றைக் கொண்டும் காயகற்ப மருந்துகளைச்*

*சித்தர்கள் வகைப்படுத்தியுள்ளனர். இவை நூற்றிருபத்திரண்டு எனவும் இம்மருந்துகளை உட்கொள்ளும் முறைகள் பற்றியும் அதனால் உடலில் ஏற்படும் மாற்றங்கள் பற்றியும் சித்தர்கள் எடுத்துரைத்துள்ளனர் என்பதை அறியமுடிகிறது..*

*சான்றெண் விளக்கம்*

*1.எஸ்.பி.இராமச்சந்திரன் (பதி.ஆ), கற்பநூல் திரட்டு, (திருவள்ளுவர் கற்பம் 300).தாமரை நூலகம், சென்னை, முதற்பதிப்பு 1993, பா.65.*
*2.மேலது, (சட்டமுனி கற்பவிதி 100), பா.1.*
*3.பி.இரத்தினநாயகர் அன் சன்ஸ் (பதி.ஆ), திருமூலர் வைத்தியம் (கருக்கிடை 600), பி.இரத்தினநாயகர் அன் சன்ஸ் வெளியீடு, சென்னை பா.134.*
*4.எஸ்.பி.இராமச்சந்திரன். (பதி.ஆ.), மு.நூ. (போகர் கற்பம் 300), தாமரை நூலகம், சென்னை, பா.190.*
*5.பி.இரத்தினநாயகர் அன் சன்ஸ், (பதி.ஆ), திருமூலர் வைத்தியம் (கருக்கிடை 600), பி.இரத்தினநாயகர் அன் சன்ஸ் வெளியீடு, சென்னை, பா.134.*
*6.கந்தசாமி முதலியார் (தொ.ஆ) போகர் 7000 முதல் 1000, பார்த்தசாரதி நாயுடு அன் சன்ஸ் வெளியீடு, சென்னை பா.647.*
*7. மேலது, பா.647.*
*8.ஆர்.எம்.கே.வேலுச்சாமி (தொ.ஆ), சட்டமுனிவாத காவியம் 1000.தமிழ்நாடு சித்த மருத்துவ வாரியம், சென்னை பா.431.*
*9.பி.இரத்தினநாயகர் அன் சன்ஸ், (பதி.ஆ.), திருமூலர் வைத்தியம், (கருக்கிடை 600), பி.இரத்தினநாயகர் அன் சன்ஸ் வெளியீடு, சென்னை, பா.302.*
*10. மேலது, பா.137.*
*11.கந்தசாமி முதலியார், (தொ.ஆ), போகர் 7000 முதல் 1000, பார்த்தசாரதி நாயுடு அன் சன்ஸ் வெளியீடு, சென்னை. பா.619.*

********* ********* ********** ********* ********* ********** ********** **********